தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 175 /ந/2024

நாள். 08.05.2025

| | | |
|---|---|---|
| திரு.R.மயில்சாமி,<br>புதுவிளாங்குடி, மதுரை | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>திருமங்கலம் நகராட்சி, திருமங்கலம் | – | எதிர்மனுதாரர் |

மதுரை மாவட்டம், மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன்தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 04.11.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2023 அன்று பெறப்பட்டு, 175/ந/2024 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன்தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தமது 04.11.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

"மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சி, வார்டு எண்.14, சோழவந்தான் ரோடு, சந்தைபேட்டை அருகில் கதவு எண்.26, செங்குளம் கிழக்கு தெருவில் இயங்கி வரும் புதிய கட்டிடம் பாத்திமா மருத்துவமனை மற்றும் ஆயிஷா கருத்தரித்தல் மையம் மருத்துவமனை கட்டடம் – தரைதளம் 991.370, முதல் தளம் 991.370, மொத்தம் சதுர அடிகள் 1982.740க்கு நகராட்சியால் அனுமதி பெற்றுக்கொண்டு கூடுதலாக இரண்டு மாடிகள் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. மேற்படி மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் (commercial building) என்பதால் மாவட்ட நகர் ஊரமைப்பு துறையினரிடம் அனுமதி பெறாமல், நகராட்சியில் மட்டும் அனுமதி பெற்றுக்கொண்டு சட்ட விரோத கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இம்மருத்துவமனை

கட்டடத்திற்கு மூன்று பக்கங்களிலும் மருத்துவமனை கட்டட விதிகளின்படி இடைவெளி இடம்(set back spaces) விடாமல் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை வர்த்தக கட்டடம் என்பதால் வர்த்தக கட்டடத்திற்கான சொத்துவரி விதிக்காமல், வீட்டு வரிக்கான சொத்துவரி மூன்று ஆண்டுகளுக்கு மொத்த வரி ரூபாய் 653/– மட்டும் நகராட்சிக்கு செலுத்துவதனால் நகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருகிறது. மேற்படி மருத்துவமனை கட்டடத்திற்கு அனுமதி அளித்து, கட்டடத்தை கண்காணிக்கத்தவறிய நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் சம்பந்தப்பட்ட திருமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மீது துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். இது குறித்து புகார் மனுவை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் 16.10.2023 தேதியில் பதிவு தபாலில் (RT 475885624 IN) அனுப்பி இருந்தும் இதுநாள் வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே மேற்படி பாத்திமா மருத்துவமனை மற்றும் ஆயிஷா கருத்தரித்தல் மையம் மருத்துவமனை கட்டடம் set back மூன்று புறங்களிலும் இடைவெளி இடம் 13 அடி விடாமலும், மொத்தம் 1982 சதுர அடிக்கு மட்டும் நகராட்சியில் அனுமதி பெற்றுக்கொண்டு சுமார் 4000க்கும் மேற்பட்ட சதுர அடியில் கட்டடம் கட்டப்பட்டும், மாவட்ட நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி பெறாமலும், வர்த்தகத்திற்கு உண்டான வரி செலுத்தாமல் வீட்டுமனை பிரிவிற்கான சொத்து வரி செலுத்தி வரும் மருத்துவமனை சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டடத்தை தமிழ்நாடு அரசாணை (நிலை) எண்.7, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(1)) துறை நாள்.10.01.2023ன் படியும் மற்றும் அரசாணை (நிலை) எண்.195 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(1)) துறை நாள்.05.11.2022 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21724/2016/BA2 நாள்.03.01.2017–ன்படியும், நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன்படி stop work notice/notice calling for approval plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and seal and demolition notice வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக தாழ்மையுடனும், பணிவுடனும் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கை கோரி இம்முறைமன்ற நடுவ 09.01.2024 நாளிட்ட கடிதம் மூலம் திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. நகராட்சி ஆணையாளர் தனது 03.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

"திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட சர்வே வார்டு–ஏ, பிளாக் எண்.17, கதவு எண்.26 & 28 T.S.No.201 சர்வே எண்.130–4, 138–4ஏ II. சோழவந்தான் ரோடு, செங்குளம் கிழக்கு, 3வது தெருவில் அமைந்துள்ள திரு.ரஹ்மத்துல்லா மைதீன், அஜிதாபானுவிற்கு இவ்வலுவலக கட்டிட விண்ணப்ப எண்.117/CP/21-22/0000541, ஆணை எண்.117/BL/2021/00168 நாள் 24.09.2021–ல் தரைதளம் 991.370 சதுர அடி, முதல் தளம் 991.370 சதுர அடிக்கு வணிகக்கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது மொத்தம் 1982 சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடம் கட்டுவதற்கு

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கட்டிடத்தின் அளவு கிழமேலடி 105, தென்வடலடி 37 சதுர அடி உள்ளது. கட்டிட அனுமதி பெறப்பட்ட சதுர அடியை விட கூடுதலாக 5787.26 சதுர அடி கட்டப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ன்படி 135(4)ன் கீழ் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடத்தினை திருத்தி அமைக்க தற்காலிக அறிவிப்பு Show cause notice கட்டிட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டு இதுவரை வரைபடத்தின்படி கட்டிடத்தினை திருத்தியமைத்துக்கொள்ளவில்லை. இதனால் உரிமையாளருக்கு மேற்படி சட்டப்பிரிவு 135(4)–ன் கீழ் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடத்தினை திருத்தி அமைக்க அறிவிப்பு (show cause notice) கட்டிட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் கட்டிட உரிமையாளர் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் மேற்படி கட்டிட உரிமையாளர் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரத்தை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு.R.மயில்சாமி அவர்களையும் மற்றும் எதிர்மனுதாரரான விருதுநகர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 04.11.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 03.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. அதன்பின்னர் மேற்படி விசாரணையை 25.10.2024 நாளிட்ட அழைப்பாணையின் மூலம் 12.11.2024 அன்றைய தேதிக்கு விசாரணை மாற்றியமைக்கப்பட்டது.

5. மனுதாரர் திரு.R.மயில்சாமி 12.11.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

பாத்திமா மருத்துவமனை கட்டிடத்திற்கு நான்கு புறமும் 6 மீட்டர் இடைவெளி இடம் விடாமல்(set back) சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டும், கட்டிட பணி நிறைவு சான்று பெறாமலும், 6849.49 சதுர அடி, அனுமதிக்கு கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் மருத்துவமனை கட்டிடம் வணிக கட்டிடம் என்பதால் மாவட்ட நகர் ஊரமைப்பு திட்ட இயக்குநரகத்தில் அனுமதி பெறாமலும், தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2(8) கீழ் வருவாய் துறை மூலம் உரிமம் பெறாமலும் கட்டப்பட்டுள்ளது. பாத்திமா மருத்துவமனை கட்டிடம் 100% சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதால்,அம்மருத்துவமனையின் மீது தமிழ்நாடு நகா ஊரமைப்புச்சட்டம், 1971 பிரிவு 56 மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 80–A-ன்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

6) திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் 12.11.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

"திரு.மயில்சாமி அவர்கள் திரு.ரஹ்மத்துல்லா மைதீன், திருமதி.அஜிதா பானுவிற்கு திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட சர்வே வார்டு ஏ பிளாக் எண்.17, கதவு எண்.26 மற்றும் 28 T.S.No.201. சர்வே எண்.130/4, 138 4ஏ சோழவந்தான் ரோடு, செங்குளம் கிழக்கு, 3வது தெருவில் அமைந்துள்ள கட்டிடம் 5787.26 சதுர அடி கூடுதலாக கட்டப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இக்கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 135(1) (4)–ன் கீழ் பிறப்பிக்கப்படும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தற்காலிக அறிவிப்பு நாள் **24.05.2024, 25.10.2024** மற்றும் **05.11.2024**–ல் வழங்கப்பட்டது என முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவசர மற்றும் அவசியம் கருதி ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மனதார உறுதிமொழி அளிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) 2–ஆம் எதிர்மனுதாரர் பாத்திமா மருத்துவமனையின் உரிமையாளரை 28.11.2024 அன்றைய விசாரணைக்கு ஆஜராக இம்முறைமன்ற நடுவத்தின் 14.11.2024 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. பின்னர் 28.11.2024 நாளிட்ட அழைப்பாணை மூலம் 10.12.2024 அன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது. பாத்திமா மருத்துவமனை உரிமையாளர் சார்பாக திரு.G.B.ராம்பிரசாத் என்பவர் 10.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை தெரிவித்துள்ளார்.

எங்களது மருத்துவமனை கட்டிடமானது முதலில் வணிக பயன்பாட்டு கட்டிடமாக நகராட்சியில் உரிய அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது. எங்களது மருத்துவமனையின் உரிமையாளர்கள் இருவரும் மருத்துவர்கள் என்பதால், மக்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடன் வணிக வளாகமாக இருந்த கட்டிடத்தில் மருத்துவமனை நடத்தி வருகின்றனர்.

மேற்படி மருத்துவமனை நகராட்சிக்கு உரிய சொத்துவரி, குழாய் வரி போன்ற வரிகளை முறையாக நகராட்சிக்கு செலுத்தி வருகின்றது. தற்போது எங்களது மருத்துவமனைக்கு நகராட்சி அலுவலகத்திலிருந்து கூடுதலாக 2000 சதுர அடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக 13.11.2024 நாளிடப்பட்ட அறிவிப்பு வழங்கப்பட்டு, வழங்கப்பட்ட அனுமதிக்கு கூடுதலாக 2000 சதுர அடிக்கும் அதிகமாக கட்டப்பட்டுள்ள எங்களது மருத்துவமனை கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை, மதுரை அவர்களிடம் அறிவிப்பு கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் மேல்முறையீடு செய்து திருத்திய கட்டிட அனுமதி பெற தெரிவிக்கப்பட்டது. தவறும்பட்சத்தில் நகராட்சி அறிவிப்பின்படி நடந்துகொள்ளாத காரணத்தினால் தொடர் நடவடிக்கையாக எங்களது கட்டிடம் பூட்டி முத்திரையிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி அளித்துள்ள அறிவிப்பிற்கு (Notice) உரிய பதில் அளிக்க உள்ளோம். அதனடிப்படையில் பாத்திமா மருத்துவமனையில் கூடுதலாக கட்டப்பட்டுள்ள 2000 சதுர அடிக்கு, நகர் ஊரமைப்பு துறை, மதுரை அவர்களிடம் முறையாக விண்ணப்பித்து பாத்திமா மருத்துவமனை சார்பாக தொடர் நடவடிக்கையில் ஈடுபடஉள்ளோம் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறேன். மேலும் விரைவில் நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து திருத்திய கட்டிட அனுமதி பெற்று விடுவோம்" என தெரிவித்துள்ளார்.

8) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருமங்கலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

மனுதாரர் தனது புகார் மனுவிலும் வாக்குமூலத்திலும், பாத்திமா மருத்துவமனை கட்டிடத்திற்கு நான்கு புறமும் 6 மீட்டர் இடைவெளி இடம் விடாமல்(set back) சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டும், கட்டிட பணி நிறைவு சான்று பெறாமலும், **6849.49** சதுர அடி, அனுமதிக்கு கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், மேலும் மருத்துவமனை கட்டிடம் வணிக கட்டிடம் என்பதால் மாவட்ட நகர் ஊரமைப்பு திட்ட இயக்குநரகத்தில் அனுமதி பெறாமலும், தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2(8) கீழ் வருவாய் துறை மூலம் உரிமம்

பெறாமல் கட்டப்பட்டுள்ளது என்றும், பாத்திமா மருத்துவமனை கட்டிடம் 100% சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதால்,அம்மருத்துவமனையின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971 பிரிவு 56 மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 80–A-ன்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

நகராட்சி அலுவலகத்திலிருந்து, தமிழ்நாடு நகர்புற அமைப்பு 1971–ன்படி DTCP ஒப்புதல் பெற வேண்டி திருத்தப்பட்ட நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 135(1) (4)ன் கீழ் பிறப்பிக்கப்படும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு தற்காலிக அறிவிப்பு நாள்.24.05.2024, 25.10.2024 மற்றும் 05.11.2024–ல் பாத்திமா மருத்துவமனை உரிமையாளருக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்பதும் நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மேலும் மேற்படி மருத்துவமனைக்கு, நகராட்சிக்குரிய சொத்து வரி, குழாய் வரி போன்ற வரிகளை முறையாக நகராட்சிக்கு செலுத்தப்பட்டு வருவதும், கூடுதலாக 2000 சதுர அடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக நகராட்சி ஆணையரால் 13.11.2024 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டு, வழங்கப்பட்ட அனுமதிக்கு கூடுதலாக 2000 சதுர அடிக்கும் அதிகமாக கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டிடத்திற்கு மதுரை, நகர் ஊரமைப்புத் துறையிடம் மேல்முறையீடு செய்து திருத்திய கட்டிட அனுமதி பெற அறிவுறுத்தியுள்ளதையும், தவறும் பட்சத்தில் நகராட்சி அறிவிப்பின்படி நடந்து கொள்ளாத காரணத்தினால் தொடர் நடவடிக்கையாக மேற்படி மருத்துவமனை கட்டிடம் பூட்டி முத்திரையிடப்படும் என நகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளதையும், மதுரை நகர் ஊரமைப்பு துறையிடம் முறையாக விண்ணப்பித்து பாத்திமா மருத்துவமனை திருத்திய கட்டிட அனுமதி பெற்று விடுவோம் என கூறியுள்ளதையும் 2–ம் எதிர்மனுதாரர் சார்பாக ஆஜரான நபரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

எனவே இந்நேர்வில், திருமங்கலம் நகராட்சி ஆணையர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, உரிய கள ஆய்வு செய்து அளவீடுகளை கணக்கிட்டு தமிழ்நாடு நகர்ப்புற அமைப்பு சட்டம் 1971, மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–ன் கீழ் உரிய தொடர் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள திருமங்கலம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, மே திங்கள் 08–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.R.மயில்சாமி,
த/பெ. திரு.இராமலிங்கம்,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 625 018.

2) நகராட்சி ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி,
திருமங்கலம்.
மதுரை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

15/5/25
செயலாளர்